ராக சத்திய நாராயணன்

ஹரி ஓம்

ஸ்ரீ ராம ஜெயம்

# தமிழ் அர்ச்சனை மலர்

## [திருமால்]




வித்துவான்:

தி. பட்டுச்சாமி ஓதுவார்

உ

ஸ்ரீ ராம ஜெயம்

# தமிழ் அர்ச்சனை மலர்

## திருமால்

ஓம்

திரு இராமாநுசர் திருவடிகளே சரணம்

உலகினை அளந்த உத்தமா போற்றி
கருணை பொழியும் கண்ணா போற்றி
அரங்கத் துறையும் ஆரணா போற்றி
மானேர் விழிமாள் மார்பா போற்றி
சகடம் உதைத்த சதுரா போற்றி

பாம்பணை கொண்ட பரமா போற்றி
ஆயர் குடிக்கோர் அன்பா போற்றி
மாயம் புரியும் மாதவா போற்றி
நற்றவர் வணங்கும் நாரணா போற்றி
ஆனிரை மேய்த்த அறவா போற்றி

வாசு தேவ வாமனா போற்றி
சிந்தனைக் கரிய செல்வா போற்றி
கச்சிப் பதிவாழ் கண்ணா போற்றி
பாற்கடல் கண்வளர் பரமா போற்றி
பதும நாபனே பண்பா போற்றி

பரசு ராமப் பனவா போற்றி
அனைத்தும் அறியும் அமரா போற்றி
இருடி கேசவ இறைவா போற்றி
பாண்டவர்க் கருளிய பரமா போற்றி
அரிகோ விந்தா அச்சுதா போற்றி

வானுற நிமிர்ந்த வண்ணா போற்றி
நாரணன் என்ற நாதா போற்றி
கேசியைக் கொன்ற கேசவா போற்றி
மாதவர் போற்றும் மாதவ போற்றி
ஆழி ஏந்திய அழகா போற்றி

விளவு எறிந்த வித்தகா போற்றி
கனியினும் இனிய கண்ணா போற்றி
குரங்குப் படையுடைக் குழகா போற்றி
கற்றோர் பரவும் காரணா போற்றி
எங்கணும் நிறைந்த இறைவா போற்றி

சீதா பிராட்டியின் தேவா போற்றி
நன்மறை காத்த நற்றவா போற்றி
நாரதர்க் கருளிய நாதா போற்றி
வாலியை வதைத்த வரதா போற்றி
பூவ ராகா புனிதா போற்றி

வழுவிலா வாள்கொள் மாதவா போற்றி
வீரவில் ஏந்திய விமலா போற்றி
உருக்கு மணிமகிழ் உபேந்திரா போற்றி
கௌரவர் குடிக்குக் காலா போற்றி
இரகு குலத்து இராமா போற்றி

மழுப்படை தாங்கிய மாண்பா போற்றி
பரம பதம் அருள் பரமா போற்றி
நிலமகள் தனக்கு நேயா போற்றி
மாலிருஞ் சோலை மாண்பா போற்றி
வேங்கட மாமலை விமலா போற்றி

நினைவை அறியும் நின்மலா போற்றி
பொங்குங் கீர்த்திப் பூரணா போற்றி
ஐம்படை தாங்கிய அழகா போற்றி
நலந்தரும் சொல்லுடை நாரணா போற்றி
விண்ணவர் போற்றும் வித்தகா போற்றி

கடலைக் கடைந்த கண்ணா போற்றி
முனிவர்க் கருளிய முகில்வண்ணா போற்றி
நாமம் பலவுடை நாயகா போற்றி
கருடக் கொடியுடை கண்ணா போற்றி
வானவர் போற்றும் மணியே போற்றி

அறிவினுக் கறிவாம் அரியே போற்றி
மதுசூ தனனே மணியே போற்றி
காரொளி வண்ணக் கடால போற்றி
ஆனைக் கருளிய அண்ணலே போற்றி
தேவகி பெற்ற சிங்கமே போற்றி

அச்சுதா அமரர் அரசே போற்றி
ஆக்கம் அருளும் ஐயனே போற்றி
மண்ணுண் டுமிழ்ந்த மாயனே போற்றி
பூமகள் போற்றும் புனிதனே போற்றி
ஆதிமூ லப்பொருள் ஆனாய் போற்றி

ஊனாய் உயிராய் உற்றாய் போற்றி
ஒப்பில் தாமரை உந்தியாய் போற்றி
தூணில் தோன்றிய தூயாய் போற்றி
ஆமை வடிவாய் அமைந்தாய் போற்றி
அசுரர் பலரை அழித்தாய் போற்றி

முந்தை வினையினை முறிப்பாய் போற்றி
அந்தமில் பரபதம் அளிப்பாய் போற்றி
நற்றமிழ்ப் பற்றினால் நடந்தாய் போற்றி
திருவலிக் கேணியில் திகழ்ந்தாய் போற்றி
குறளாய் நிலத்தைக் கொண்டாய் போற்றி

பந்த பாசம் பறிப்பாய் போற்றி
கொடிய வல்வினை தீர்ப்பாய் போற்றி
மலையால் மழையினை மறித்தாய் போற்றி
அரசனாய் அயோத்தி ஆண்டாய் போற்றி
எப்பொருள் தனையும் ஈவாய் போற்றி

தஞ்சமென் றவரைத் தாங்கினாய் போற்றி
நிலங்கீழ் வராகமாய் நின்றாய் போற்றி
சிசுபா லன்தனைச் செற்றாய் போற்றி
மாலையில் வெயிலை மறைத்தாய் போற்றி
இலங்கைக் கிறையை இறுத்தாய் போற்றி

ஆனில ஐந்தும் ஆனாய் போற்றி
தாடகை மடியத் தாக்கினாய் போற்றி
ஆமை வடிவாய் அமைந்தாய் போற்றி
கஞ்சன் வஞ்சனை கடந்தாய் போற்றி
சிலையினைப் பெண்ணாய் செய்தாய் போற்றி

வாணா சுரனை வதைத்தாய் போற்றி
ஊனமில் சக்கரம் உடையாய் போற்றி
மாவலி மாண்பை மாய்த்தாய் போற்றி
அருளே உருவாய் அமைந்தாய் போற்றி
ஏதமில் தண்டினை ஏந்தினாய் போற்றி 95

அர்ச்சை வடிவாய் அமர்ந்தாய் போற்றி
ஆண்டாள் மாலையினை அணிந்தாய் போற்றி
பூதகி வஞ்சம் போக்கினாய் போற்றி
மல்லர் பலரை மாய்த்தாய் போற்றி
நீரில் மீனாய் நீந்தினாய் போற்றி 100

குவலயா பீடம் கொன்றாய் போற்றி
நலமெலாம் உயிர்க்கு நல்குவாய் போற்றி
காளியின் கர்வம் கடிந்தாய் போற்றி
மருத மரத்தினை மாய்த்தாய் போற்றி
தாமரை புரையும் தாளாய் போற்றி 105

தீரா வினைகள் தீர்ப்பாய் போற்றி
உள்ளுணர் கீதையை உரைத்தாய் போற்றி
பூமகள் கணவா போற்றி போற்றி.

**திரு இராமாநுசர் திருவடிகளே சரணம்**

எல்லா உயிர்க்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே
எல்லாருக்கும் இயல்பாம் இன்பம்
எல்லா வாழ்வும் இறைவன் யோகமே!

— சுத்தானந்த பாரதி

---



## பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபா

அவர்களுடைய

# 65-வது ஆண்டு பிறந்த நாள்

சமர்ப்பணம்

**23 - 11 - 1990**

---

இலவச வெளியீடு:

**ஸ்ரீ லக்ஷ்மி அச்சகம்,**

37, கண்டி வீதி, — யாழ்ப்பாணம்.